# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1780/31 - 2012 ඔක්තෝබර් මස 19 වැනි සිකුරාදා - 2012.10.19

*1780/31 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 4/96.*

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின சட்டத்தின் பிரிவு 61 இன் கீழ் கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

(வைத்திய கலாநிதி) ராஜித சேனாரதன,
கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சர்.

கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சு,
கொழும்பு,
2012, ஒற்றோபர் 08.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் கடற்றொழில் முகாமைத்துவ (உயிரற்ற சிப்பி ஓடுகளைச் சேகரித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளெவரும், பணிப்பாளர் தலைமையதிபதியால் அதன்சார்பில் வழங்கப்பட்ட வலிதான உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, வர்த்தக நோக்கங்களுக்காக இலங்கை பெருநீர்ப்பரப்பில் அல்லது அவற்றை அடுத்து இருக்கும் கடலையண்டிய இடப்பரப்பிலிருந்து உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுத்தல், அகற்றுதல், சேகரித்தல், ஒன்றுதிரட்டல் அல்லது கொண்டு செல்லுதல் ஆகாது.

3. ஆளெவரும் உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுத்தல், அகற்றுதல், சேகரித்தல் அல்லது ஒன்றுதிரட்டல் நோக்கங்களுக்காக இயந்திரமான இழுவை நடவடிக்கைகளில் ஈடுபடுதலாகாது.

4. ஒழுங்குவிதி 2 இல் குறிப்பிடப்பட்ட உரிமத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட உரிமமளிக்கும் அலுவலரொருவருக்கு செய்யப்படுதல் வேண்டும்.

5. ஒழுங்குவிதி 2 இன் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமமும் :-

(அ) இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், முன்னதாக இரத்துச் செய்யப்பட்டாலன்றி, வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்கு நடைமுறையில் இருத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும் .

6. ஆளெவரும், பணிப்பாளர் தலைமையதிபதியால் வழங்கப்பட்ட வலிதான உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் அன்றி, ஏதேனும் உயிரற்ற சிப்பி ஓடுகளை உடைமையில் வைத்திருத்தல் அல்லது கொண்டு செல்லுதல் ஆகாது.

7. ஒழுங்குவிதி 6 இல் குறிப்பிடப்பட்ட உரிமத்திற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் :-

(அ) பொருளளவில் இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியால் நியமிக்கப்பட்ட உரிமமளிக்கும் அலுவலருக்கு செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) உயிரற்ற சிப்பி ஓடுகளின் ஆயிரம் கிலோ கிராமுக்கு ரூபா ஐந்நூறு (500.00 ரூபா) என்ற வீதத்தில் கணிப்பீடு செய்யப்பட்ட கட்டணமொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. ஒழுங்குவிதி 6 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும் :-

(அ) இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், முன்னதாக இரத்துச் செய்யப்பட்டாலன்றி, வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதகாலப்பகுதிக்கு நடைமுறையில் இருத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

9. ஆளெவரும், பணிப்பாளர் தலைமையதிபதியால் அலங்காரப் பொருள் கைத்தொழில் நடவடிக்கை வழங்கப்பட்ட வலிதான உரிமத்தின் அதிகாரத்தின் கீழன்றி ஏதேனும் உயிரற்ற சிப்பி ஓடுகளை உடைமையில் வைத்திருத்தல், விற்றல், விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது கொண்டு செல்லுதல் ஆகாது.

10. ஒழுங்குவிதி 9 இல் குறிப்பிடப்பட்ட உரிமத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் -

(அ) பொருளளவில் இதற்கான அட்டவணை V இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியால் நியமிக்கப்பட்ட உரிமமளிக்கும் அலுவலருக்கு செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இருநூற்று ஐம்பது ரூபா (250.00 ரூபா) கட்டணத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. ஒழுங்குவிதி 9 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும் -

(அ) இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், முன்னதாக இரத்துச் செய்யப்பட்டாலன்றி, வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதகாலப்பகுதிக்கு நடைமுறையில் இருத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

12. பணிப்பாளர் தலைமையதிபதி குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகள் மற்றும் கிடைக்கத்தகு வளங்களுக்கேற்ப வழங்ப்படக்கூடிய உரிமங்களின் எண்ணிக்கையை தீர்மானிக்கலாம்.

13. உரிமம் ஒன்று பணிப்பாளர் தலைமையதிபதியால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உரிமமளிக்கும் அலுவலரால், உரிமம் வைத்திருப்பவர் -

(அ) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை; அல்லது

(ஆ) அத்தகைய உரிமத்திலுள்ள ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையை

மீறுகின்றவிடத்து, இல்லாதொழிக்கப்படலாம் ;

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய உரிமத்தை இல்லாதொழிப்பதற்கு முன்னர் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியால் நியமிக்கப்பட்ட உரிமமளிக்கும் அலுவலர் உரிமம் வைத்திருப்பவருக்கு கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை வழங்குதல் வேண்டும்.

14. இவ்வொழுங்குவிதிகளில் -

''குழு'' என்பது கிடைக்கத்தகு வளங்களுடன் தொடர்புடைய விடயங்களை மீளாய்வு செய்வதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியால் நியமிக்கப்பட்ட குழு எனப் பொருள்படும்.

"உயிரற்ற சிப்பி ஓடுகள்" என்பது பையிலியம் மொலஸ்கத்தின் உயிரற்ற சிப்பி ஓடுகள் (ரேபின்னெல்லா பைறம் நீங்கலாக) எனப் பொருள்படும்.

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்களின் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்.

"உரிமமளிக்கும் அலுவலர்" என்பது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் பிரிவு 6 இன் கீழ் நியமிக்கப்பட்ட உரிமமளிக்கும் அலுவலர் எனப் பொருள்படும் ; அத்துடன்

"இலங்கை பெருநீர்ப்பரப்பு" என்பது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் அதற்கென குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஒழுங்குவிதி 4 ).

## *அட்டவணை I*

**இலங்கை பெருநீர்ப்பரப்பிலிருந்து அல்லது அதனை அடுத்து இருக்கும் கடலையண்டிய பகுதியிலிருந்து உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுப்பதற்கு, அகற்றுவதற்கு, சேகரிப்பதற்கு, ஒன்று திரட்டுவதற்கு அல்லது கொண்டு செல்வதற்கான உரிமத்திற்கான விண்ணப்பம்**

(1) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.

(2) (அ) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி :----.

(ஆ) தபால் முகவரி :----.

(இ) மின்னஞ்சல் :----.

(3) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

(4) உயிரற்ற சிப்பி ஓடுகள் அகற்றப்பட்ட இடம் :----.

(5) உயிரற்ற சிப்பி ஓடுகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வள்ளம்/வள்ளங்களின் விபரங்கள் :----.

(அ) வள்ளத்தின் வகை :----.

(ஆ) வள்ளத்தின் நீளம் :----.

(இ) வள்ளத்தின் நிறை :----.

(ஈ) பதிவிலக்கம் :----.

(உ) இயந்திரத்தின் பரிவலு :----.

(ஊ) உள்ளிணை அல்லது வெளியணை இயந்திரம் என்பது பற்றி :----.

(எ) மீன்பிடித்தொழிற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை (படகோட்டி உட்பட) :----.

(6) உயிரற்ற சிப்பி ஓடுகளை அகற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட நேரம் மற்றும் காலம் :----.

(7) அகற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட உயிரற்ற சிப்பி ஓடுகளின் அளவு (கிலோ கிராமில்) :----.

மேலே என்னால் குறிப்பிடப்பட்ட விவரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள், நிபந்தனைகளுக்கும் மற்றும் 2012 ஆம் ஆண்டின் கடற்றொழில் முகாமைத்துவ (உயிரற்ற சிப்பி ஓடுகள் சேகரித்தல்) ஒழுங்குவிதிகளிற்கு நான் அமைந்து நடப்பேன் எனவும் உறுதி கூறுகிறேன்.

........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

.............................................
திகதி

அலுவலகப் பாவனைக்கு மட்டும்

கடற்றொழில் பரிசோதகர்/துறைசார் அதிகாரியின் கருத்துக்கள்

அலுவலரின் கையொப்பம் :----.

பெயர் :----.

பதவி :----.
இடப்பரப்பு :----.
திகதி :----.

மாவட்ட உதவிப் பணிப்பாளரின் விதப்புரை :

....................................................................... இல் வதியும் .................................................................. எனும் பெயர் கொண்ட விண்ணப்பதாரிக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இங்கு விவரிக்கப்படும் உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுப்பதற்கு, அகற்றுவதற்கு, சேகரிப்பதற்கு, ஒன்று திரட்டுவதற்கு அல்லது கொண்டு செல்வதற்கான உரிமம் வழங்கப்படவேண்டுமென நான் விதப்புரை செய்கின்றேன்/ செய்யவில்லை.

1. :----.
2. :----.
3. :----.

அலுவலரின் கையொப்பம் :
பெயர் :
பதவி :
பிரதேசம் :
திகதி :

பணிப்பாளர் தலைமையதிபதி/உரிமமளிக்கும் அலுவரின் கட்டளை.

உரிமம் வழங்குவதனை அனுமதியளிக்கின்றேன்/அனுமதியளிக்கவில்லை.

அனுமதியளிக்கப்பட்டால், உரிமத்துடன் இணைக்க வேண்டிய விசேட நிபந்தனைகள்.

பணிப்பாளர் தலைமையதிபதியின்/உரிமமளிக்கும் அலுவலரின் கையொப்பம் :----.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

*(ஒழுங்குவிதி 5 ).*

### *அட்டவணை II*

*கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்*
*"புதிய செயலகக் கட்டிடம்",*
*மாளிகாவத்தை,*
*கொழும்பு 10.*

**உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுப்பதற்கு, அகற்றுவதற்கு, சேகரிப்பதற்கு, ஒன்றுதிரட்டுவதற்கு அல்லது கொண்டு செல்வதற்கான உரிமம்**

......................................................................................................... இல் வசிக்கும் ......................................................................... என்பவருக்கு...................................................................... கிலோ கிராம் உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுப்பதற்கு, அகற்றுவதற்கு, சேகரிப்பதற்கு, ஒன்றுதிரட்டுவதற்கு அல்லது கொண்டு செல்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

1. இந்த உரிமம் .................................................. முதல் .............................................. வரை செல்லுபடியாகும்.

2. இந்த உரிமமானது பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

(i) இந்த உரிமம் எவருக்கு வழங்கப்பட்டதோ அவ்வாளினால் மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், வேறு எவரேனுமாளுக்கு கைமாற்றப்படுதலாகாது ;

(ii) இந்த உரிமம் 2012 ஆம் ஆண்டின் (உயிரற்ற சிப்பி ஓடுகளைச் சேகரிக்கும்) கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவானதாகும் ;

(iii) புதிய உரிமம் ஒன்றிற்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் முன்னைய உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுத்தல், அகற்றுதல், சேகரித்தல், ஒன்று திரட்டல் அல்லது கொண்டு செல்லுதல் தொடர்பான பற்றுச்சீட்டுகளுடன் ஒன்றாக இணைத்து முன்னைய உரிமத்தினை ஒப்படைத்தல் வேண்டும் ;

(iv) இந்த உரிமமானது அது வழங்கப்பட்ட நோக்கம் அல்லாத ஏதேனும் வேறு மீன்பிடித் தொழிற்பாட்டிற்கு பயன்படுத்தப்படுதல் ஆகாது.

.....................................................................
பணிப்பாளர் தலைமையதிபதி,
கடற்றொழில், நீர்வாழ் உயிரின
வளங்கள் திணைக்களம்.

திகதி :

*(ஒழுங்குவிதி 7).*

### *அட்டவணை III*

**உயிரற்ற சிப்பி ஓடுகளை உடமையில் வைத்திருத்தல் அல்லது கொண்டு செல்வதற்கான விண்ணப்பப்படிவம்**

(1) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.

(2) (அ) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி :----.

(ஆ) தபால் முகவரி :----.

(இ) மின்னஞ்சல் :----.

(3) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

(4) உயிரற்ற சிப்பி ஓடுகள் அகற்றப்பட்ட இடம் :----.

(5) கொண்டு செல்லும் முறை : (அ) வாகன இல. :----.
(ஆ) கொண்டு செல்லும் பாதை :----.

(6) உயிரற்ற சிப்பி ஓடுகளை களஞ்சியப்படுத்தும் அல்லது உடமையில் வைத்திருக்கும் இடம் :

என்னால் குறிப்பிடப்பட்ட விவரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். உரிமத்தில் குறித்த நியதி, நிபந்தனைகளுக்கும் மற்றும் 2012 ஆம் ஆண்டின் கடற்றொழில் முகாமைத்துவ (உயிரற்ற சிப்பி ஓடுகள் சேகரித்தல்) ஒழுங்குவிதிகளிற்கு நான் அமைந்து நடப்பேன் எனவும் உறுதி கூறுகிறேன்.

..................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

..........................................
திகதி .

அலுவலகப் பாவனைக்கு மட்டும்.

கடற்றொழில் பரிசோதகர்/வெளிக்கள அலுவலரினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்:----.

அலுவலரின் கையொப்பம் :----.

பெயர் :----.

பதவி :----.
பிரதேசம் :
திகதி :----.

மாவட்ட உதவிப் பணிப்பாளரின் விதப்புரை :

........................................................................ இல் வதியும் .................................................................... எனும் பெயர் கொண்ட விண்ணப்பதாரிக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இங்கு விவரிக்கப்படும் உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுப்பதற்கு, அகற்றுவதற்கு, உடமையில் வைத்திருப்பதற்கான அல்லது கொண்டு செல்வதற்கான உரிமம் வழங்கப்படவேண்டுமென நான் விதப்புரை செய்கின்றேன்/ செய்யவில்லை.

1. :----.
2. :----.
3. :----.

அலுவலரின் கையொப்பம் :----.
பெயர் :----.
பதவி :----.
பிரதேசம் :----.
திகதி :----.

பணிப்பாளர் தலைமையதிபதியின் /உரிமமளிக்கும் அலுவரின் கட்டளை.

உரிமம் வழங்குவதனை அனுமதியளிக்கின்றேன்/அனுமதியளிக்கவில்லை.

அனுமதியளிக்கப்பட்டால், உரிமத்துடன் இணைக்கவேண்டிய விசேட நிபந்தனைகள் :----.

பணிப்பாளர் தலைமையதிபதியின்/உரிமமளிக்கும் அலுவலரின் கையொப்பம் :----.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

(ஒழுங்குவிதி 8 ).

## அட்டவணை IV

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்
"புதிய செயலகக் கட்டிடம்",
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

**உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுப்பதற்கு, அகற்றுவதற்கு, சேகரிப்பதற்கு, ஒன்றுதிரட்டுவதற்கு அல்லது கொண்டு செல்வதற்கான விண்ணப்பப்படிவம்**

................................................................................................ இல் வசிக்கும் ........................................................................ என்பவருக்கு. உயிரற்ற சிப்பி ஓடுகளை உடமையில் வைத்திருக்க அல்லது கொண்டு எடுத்துச் செல்வற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

1. உரிமம் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, ....................................................... முதல்................ வரை ஆறு 06 மாதங்களுக்கு வலிதானதாகும்.

2. உரிமமானது பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

(i) இந்த உரிமம் இதனகத்துப் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளினால் மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். இது வேறொருவருக்கு கைமாற்றப்படுதலாகாது ;

(ii) இந்த அனுமதிப்பத்திரம் 2012 ஆம் ஆண்டின் கடற்றொழில் முகாமைத்துவ (உயிரற்ற சிப்பி ஓடுகள் சேகரித்தல்) ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாகும்.

(iii) புதிய உரிமம் ஒன்றிற்குப் விண்ணப்பிக்கும் நேரத்தில் முன்னைய உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுத்தல், அகற்றுதல், சேகரித்தல், ஒன்று திரட்டல் அல்லது கொண்டு செல்லுதல் தொடர்பான பற்றுச்சீட்டுகளுடன் ஒன்றாக இணைத்து முன்னைய உரிமத்தினை ஒப்படைத்தல் வேண்டும் ;

......................................................................
பணிப்பாளர் தலைமையதிபதி,
கடற்றொழில், நீர்வாழ் உயிரின
வளங்கள் திணைக்களம்.

திகதி :

(ஒழுங்குவிதி 10).

## அட்டவணை V

அலங்காரப் பொருள் கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக உயிரற்ற சிப்பி ஓடுகளை உடமையில் வைத்திருத்தல், விற்றல், விற்பதற்காக காட்சிப்படுத்தல் அல்லது கொண்டு செல்வதற்கான விண்ணப்பப்படிவம்

(1) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.

(2) (அ) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி :----.

(ஆ) தபால் முகவரி :----.

(இ) மின் அஞ்சல் :----.

(3) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

(4) உயிரற்ற சிப்பி ஓடுகள் அகற்றப்பட்ட இடம் :----.

(5) கொண்டு செல்லும் முறை : (அ) வாகனத்தின் இல. :
(ஆ) கொண்டு செல்லும் பாதை :----.

*(6) உடமையில் வைத்திருக்கும் அல்லது கைத்தொழில் நடவடிக்கையிடம்பெறும் இடம் :*

*மேலே என்னால் குறிப்பிடப்பட்ட விவரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட நியதி, நிபந்தனைகளுக்கும் மற்றும் 2012 ஆம் ஆண்டின் கடற்றொழில் முகாமைத்துவ (உயிரற்ற சிப்பி ஓடுகள் சேகரித்தல்) ஒழுங்குவிதிகளிற்கு நான் அமைந்து நடப்பேன் எனவும் உறுதி கூறுகிறேன்.*

...............................................................

*விண்ணப்பதாரியின் கையொப்பம்.*

..........................................

*திகதி .*

***அலுவலகப் பாவனைக்கு மட்டும்.***

*கடற்றொழில் பரிசோதகர்/வெளிக்கள அலுவலரினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் .*

*அலுவலரின் கையொப்பம்* :

*பெயர் :* :

*பதவி* :

*பிரதேசம்* :

*திகதி* :

***மாவட்ட உதவிப் பணிப்பாளரின் விதப்புரை :***

*உயிரற்ற சிப்பி ஓடுகளை உபயோகித்து எணி மணி பொருட்கள் உற்பத்தி செய்யும் கைத்தொழிலாக /வியாபாரமாக செய்வதற்காக, ....................................................................... இல் வதியும் ................................................................... எனும் பெயர் கொண்ட விண்ணப்பதாரிக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இங்கு விவரிக்கப்படும் உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுப்பதற்கு, அகற்றுவதற்கு, சேகரிப்பதற்கு, ஒன்று திரட்டுவதற்கு அல்லது கொண்டு செல்வதற்கான உரிமம் வழங்கப்படவேண்டுமென நான் விதப்புரை செய்கின்றேன்/ செய்யவில்லை.*

*அலுவலரின் கையொப்பம்* :----.
*பெயர்* :----.
*பதவி* :----.
*பிரதேசம்* :----.
*திகதி* :----.

*பணிப்பாளர் நாயகத்தின் /உரிமமளிக்கும் அலுவரின் கட்டளை.*

*உரிமம் வழங்குவதனை அனுமதியளிக்கின்றேன்/அனுமதியளிக்கவில்லை.*

*அனுமதியளிக்கப்பட்டால், உரிமத்துடன் இணைக்கவேண்டிய விசேட நிபந்தனைகள் :*

*பணிப்பாளர் தலைமை நாயகத்தி ன் /உரிமமளிக்கும் அலுவலரின் கையொப்பம் :*

*பெயர்* :----.
*பதவி* :----.
*திகதி* :----.

*(ஒழுங்குவிதி 11 ).*

## *அட்டவணை VI*

*கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்*
*"புதிய செயலகக் கட்டிடம்",*
*மாளிகாவத்தை,*
*கொழும்பு 10.*

### *அலங்காரப் பொருள் கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக உயிரற்ற சிப்பி ஓடுகளை உடமையில் வைத்திருத்தல், விற்றல், விற்பதற்காக காட்சிப்படுத்தல் அல்லது கொண்டு செல்வதற்கான உரிமம்*

*............................................................................................ இல் வசிக்கும் ....................................................................... என்பவருக்கு. அலங்காரப்பொருள் கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக உயிரற்ற சிப்பி ஓடுகளை உடமையில் வைத்திருத்தல், விற்றல், விற்பதற்காக காட்சிப்படுத்தல் அல்லது கொண்டு செல்வதற்காக இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.*

*1. இந்த உரிமம் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, ....................................................... முதல்............... வரை ஒருவருட காலத்துக்குச் செல்லுபடியாகும்.*

*2. இந்த உரிமம் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.*

(i) *இந்த உரிமம் இதனகத்துப் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளினால் மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். இதனை வேறொருவருக்கு கைமாற்றப்படுதலாகாது ;*

(ii) *இந்த உரிமம் 2012 ஆம் ஆண்டின் கடற்றொழில் முகாமைத்துவ (உயிரற்ற சிப்பி ஓடுகள் சேகரித்தல்) ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு அமைவானதாகும்.*

(iii) *புதிய உரிமம் ஒன்றிற்குப் விண்ணப்பிக்கும் நேரத்தில் உயிரற்ற சிப்பி ஓடுகளை எடுத்தல், அகற்றுதல், சேகரித்தல், ஒன்று திரட்டல் அல்லது கொண்டு செல்லுதல் தொடர்பான பற்றுச்சீட்டுகளுடன் ஒன்றாக இணைத்து முன்னைய உரிமத்தினை ஒப்படைத்தல் வேண்டும் ;*

......................................................................
*பணிப்பாளர் தலைமையதிபதி,*
*கடற்றொழில், நீர்வாழ் உயிரின*
*வளங்கள் திணைக்களம்.*

*திகதி :----.*

*11- 231*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

3 - PG 001413